BUSINESS STUDIES AND ACCOUNTING

GRADE 10

கணக்கீட்டுக்கான அறிமுகம்

CHAPTER 04

PREPARED BY

MOHAMED SABIR

KG/DEHI/ZAHIRA VIDYALAYA

CHAPTER 04

கணக்கீட்டுக்கான அறிமுகம்

01: கணக்கீடு என்றால் என்ன?

02: கணக்கீட்டின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம்

03: வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள்

04: கணக்கீட்டின் கூறுகள் (பிரதான கணக்கு வகைகள்)

கணக்கீடு

- வணிகமொன்றில் இடம் பெறும் நிதி சார் (பணத்தினால் அளவிட முடியுமான) கொடுக்கல் வாங்கல்களை ஏடுகளில் பதிவு செய்து சரியான முறையில் வகைப் படுத்தி நிதியறிக்கையினைத் தயாரித்து வணிகதத்தின் மீது அக்கறை காட்டும் பிரிவினருக்கு தகவல் வழங்கும் செயன்முறையே கணக்கீடு எனப்படுகிறது

கணக்கீட்டின் நோக்கங்கள்

- நிறுவனத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்க்கு தேவையான தகவல்களை வழங்குதல்.
- சட்டத் தேவைகளை நிறைவு செய்தல்.
- இலாப நட்டத்தை தெளிவாக அறிந்து கொள்ளல்.
- வரையறுக்கப்பட்ட வளங்களை கட்டுப்பாட்டுடன் பேண முடிதல்.
- தவறுகள்,மறதி மற்றும் வழுக்கள்போன்றவற்றை இணங்காண முடிதல்.

வணிகக் கொடுக்கல் வாங்கல்கள்

- வணிகம் ஒன்றிற்கும் வேறு பிரிவினருக்கும் இடையே உடன்காசுக்கு / கடனுக்கு நடை பெறும் வளங்களின் கைமாற்றமே வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் எனப்படும்.

காசுக் கொடுக்கல் வாங்கல்கள்



<u>கடன் கொடுக்கல் வாங்கல்கள்</u>

<u>வாடிக்கையாளர்</u>

முதலாளி எனக்கு 2kg மிளகாய் தூள் தாருங்கள் என்னிடம் தற்போது காசு இல்லை.அடுத்த வாரம் தருகிறேன்...

<u>உரிமையாளர்</u>

சரி இந்தாங்கோ 160/=

அடுத்த வாரம் தாருங்கள்

<u>பல்வேறுபட்ட வணிகக் கொடுக்கல் வாங்கல்களில் பணத்தால் அறவிட முடியுமான கொடுக்கல் வாங்கல்கள் மட்டுமே கணக்கீட்டில் பதியப்படும்.</u>

உதாரணம் :

1) 10000 மூலதனம் இடப்படல்
2) மாத வட்டி 20000 செலுத்தப்படல்
3) 25000கு இயந்திரம் கொள்வனவு செய்யப்படல்

<u>பணத்தால் அறவிட முடியாத கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டில் பதியப்பட மாட்டாது.</u>

உதாரணம் :

1) புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தீர்மானம் எடுத்தல்.
2) பயிற்றப்பட்ட ஊழியர்கள்.
3) நுகர்வோர் முறைப்பாடுகள்

நிகழ்வுகள்

➢ வணிக நடவடிக்கைகளில் முகாமைத்துவ தீர்மானம் மற்றும் வளங்கள் கைமாற்றம் தவிர்ந்த பண ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் ஏனைய விடயங்கள் நிகழ்வுகள் எனப்படும்.

உதாரணம்

1) இயற்கை அனர்த்தங்கள் - சுனாமி ,மண் சரிவு
2) களவு
3) கொள்ளை

நிறுவனத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்



கணக்கீட்டின் கூறுகள் மற்றும்

கணக்கீட்டின் வகைகள்



சொத்துக்கள்

- வணிகமொன்றின் கடந்த கால கொடுக்கல் வாங்கல்களினால் உருவாகியதும் பணத்தினால் அளவிடக் கூடியதும் வணிகத்துக்கு எதிர்கால நன்மைகளைப் பெற்றுத் தரக்கூடியதும்,வணிகத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதுமான வளங்கள் சொத்துக்களாகும்.

உதாரணம்:

1) இயந்திரம்
2) சரக்கிருப்பு
3) காசு
4) கடன்பட்டோர்
5) காணி
6) கட்டடங்கள்

சொத்துக்களின் பண்புகள்

- வணிகமொன்றின் கடந்த கால செயற்பாடுகள் மூலம் உருவானது
- பணத்தினால் அளவிடக் கூடியது
- எதிர் கால நன்மைகளை பெற்றுத் தரக் கூடியது
- வணிகத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது



நடை முறை சொத்துக்கள்

- நிதியாண்டுக்கு உட்பட்ட (ஒரு வருடம்) காலப்பகுதிக்குள் அடிக்கடி மாற்றங்களுக்கு உள்ளாகும் சொத்துக்கள் நடை முறை சொத்துக்கள் எனப்படும்.

உதாரணம்

1) சரக்கிருப்பு
2) கடன்பட்டோர்
3) காசு மீதி.

நடை முறை அல்லா சொத்துக்கள்

- நிதியாண்டை விட (ஒரு வருடம்) கூடிய காலப்பகுதிக்கான சொத்துக்கள் நடை முறை அல்லா சொத்துக்கள் எனப்படும்.

உதாரணம் :

1) காணி
2) கட்டடங்கள்
3) தளபாடம்
4) இயந்திரம்

பொறுப்புக்கள்

- வணிகமொன்றின் கடந்த கால கொடுக்கல் வாங்கல்களினால், நிகழ்வுகளினால் வெளி நபர்களுக்கு செலுத்த வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டவைகள் பொறுப்புக்கள் எனப்படும்.

உதாரணம் :

1) கடன் கொடுனர்
2) வங்கிக் கடன்
3) செலுத்த வேண்டிய மின்சாரம்
4) வாடகை
5) சம்பளம்

பொறுப்புக்களின் பண்புகள்.

- கடந்த கால கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக ஏற்பட்டவை.
- பொருளாதார வள வெளிப்பாய்ச்சல் ஏற்படுதல்.
- நிகழ் கால கடப்பாடு கொண்டதாக இருத்தல்.



நடைமுறைப் பொறுப்புக்கள்

.

- நிதியாண்டுக்குள் தீர்க்கப் பட வேண்டிய பொறுப்புக்கள் நடைமுறைப் பொறுப்புக்கள் எனப்படும்.

உதாரணம்

1) கடன் கொடுனர்
2) வாடகை
3) சம்பளம்
4) செலுத்த வேண்டிய மின்சாரம்

நடைமுறை அல்லாப் பொறுப்புக்கள்.

- நிதியாண்டுக்கு மேற்பட்ட காலத்தில் தீர்க்கப் பட வேண்டிய பொறுப்புக்கள் நடைமுறை அல்லாப் பொறுப்புக்கள் எனப்படும்.

உதாரணம்

1) வங்கிக் கடன்

உரிமை

- வணிகத்தின் மொத்த சொத்துக்களில் உரிமையாளருக்கு உரித்தான அளவு உரிமை எனப்படும்.

- மொத்த சொத்துக்களில் இருந்து மொத்தபொறுப்புக்களை கழித்தால் வருவது உரிமை ஆகும்.

உரிமை = சொத்துக்கள்-பொறுப்புக்கள்

10000=15000-5000

இங்கு 10000 உரிமையாகும்.

வருமானங்கள்

- மூலதன அதிகரிப்பு தவிர்ந்த உரிமையால் ஏற்படும் அதிகரிப்பு வருமானங்கள் எனப்படும்.

உதாரணம் :

2) காசு விற்பனை
3) பெற்ற வட்டி
4) பெற்ற வாடகை
5) பெற்ற வருமானங்கள்

செலவினங்கள்

- பற்று மூலம் தவிர்ந்த உரிமையால் ஏற்படும் குறைவு செலவினங்கள் எனப்படும்.

உதாரணம்

1) சம்பளம்
2) மின் கட்டணம்
3) காப்புறுதி

- வருமானங்கள் செலவினங்களுக்கிடையிலான வேறுபாடு இலாபம்/ நட்டம் எனப்படும்.
- இவ்விரண்டும் உரிமையாளரைக்கே உரித்துடையதாகும்.
- இலாபம் ஏற்பட்டால் உரிமை அதிகரிக்கும்,நட்டம் ஏற்பட்டால் உரிமை குறைவடையும்.

இலாபம் =வருமானங்கள் - செலவினங்கள்
10000=17000-7000

பின்வருவனவற்றை கணக்கிட்டுக் கூறுகளில் (சொத்துக்கள், பொறுப்புக்கள்,உரிமை,வருமானம் மற்றும் செலவு) பட்டியற் படுத்துக

	சொத்து	**பொறுப்பு**	**உரிமை**	**வருமானம்**	**செலவு**
பெற்ற வாடகை					
தொலைபேசி கட்					
வட்டி					
காப்புறுதி					
காணி					
கட்டடம்					
இயந்திரம்					
அட்டுறு செலவு					
சம்பளம்					
கடன் பட்டோர்					
விற்பனை					
மூலதனம்					
வங்கிக் கடன்					